 රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

அரச கணக்குகள் திணைக்களம்

# Department of State Accounts

මගේ අංකය / எனது இல. / My No. SA/MA/C'CULAR

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2013.11.04

அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் : 231 / 2013

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
மாவட்டச் செயலாளர்கள் யாவருக்கும்,

கனம் ஐயா / அம்மணி

## 2013 ஆம் நிதியாண்டுக்கான கணக்குகளைத் தீர்த்தல்

நிதி ஒழுங்குவிதிகள் 429 இன் பிரகாரம் 2013 ஆம் நிதியாண்டின் கணக்குப் புத்தகங்களை 2013 திசெம்பர் 31 ஆம் திகதியன்று தீர்க்க வேண்டியிருக்கின்றது. அதன் பிரகாரம் ஆண்டுக்குரிய கணக்குச் சுருக்கங்கள், மாற்றல் கட்டளைகள் மற்றும் ஏனைய கணக்கு அறிக்கைகள் என்பவற்றைச் சரியாகவும் முறையாகவும் இதன் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு கிடைக்கக் கூடிய விதமாக அனுப்புதல் வேண்டும். அதன் பொருட்டு சகல அமைச்சுக்களும், திணைக்களங்களும் மற்றும் மாவட்டச் செயலகங்களும் இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றுமாறு வலியுறுத்தப்படுகின்றன.

2. பொது விடயங்கள் -

2.1 இந்தத் திணைக்களத்தின் இணையத் தளப் பக்கத்தில் உட்செலுத்தப்பட்டுள்ள உங்களது அமைச்சின்/ திணைக்களத்தின் செலவினத் தலைப்புக்குரிய மாதாந்தக் கணக்கு விபரங்களை பரிசீலனை செய்து, போதியளவு ஏற்பாடு இன்றி செலவு விடயங்களுக்குச் செய்யப்பட்ட வரவு வைத்தல்கள் இருப்பின் உடனடியாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.2 குறைநிரப்பு கணக்குச் சுருக்கத்தின் மூலம் ஏனைய அமைச்சொன்றில்/ திணைக்களமொன்றில்/ மாவட்டச் செயலகமொன்றில் கணக்குகளுக்கு குறிப்புகள்



මහ භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை. General Treasury, Colombo 01, Sri Lanka. General - Tel.: +94 112 484600 Website: www.sad.gov.lk
Director General - Tel.: +94 112 484728 Fax: +94 112 473856 e-mail: dgsa@sad.treasury.gov.lk Additional Director General - Tel.: +94 112 484898
Director (Accounting & Reporting): +94 112 484747 Director (Accounting Services): +94 112 484753 Director (Systems & Training): +94 112 484733

பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களில் அந்த அமைச்சின் / திணைக்களத்தின் / செயலகத்தின் முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

2.3 பிழையான கணக்குகளை சரிசெய்வதற்காக திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டியது, தொடர்புடைய அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அந்த கணக்கு வைப்புகளை சரிசெய்து நடைமுறைச் சாத்தியமற்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமேயாகும். அவ்வாறான சரிசெய்தலுக்காக இந்தத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்ற மாற்றல் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மை சம்பந்தமாக தொடர்புடைய அமைச்சின் / திணைக்களத்தின்/ மாவட்டச் செயலகத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பொறுப்பளிக்கப்படும்.

2.4 அந்தந்த அமைச்சுக்கு உரிய 2013 ஆம் ஆண்டின் இறுதித் திறைசேரி கணக்கு கூற்றை இந்தத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் வெளியிடுவதற்கு மேலதிகமாக அதன் சான்றுப்படுத்தப்பட்ட மூலப் பிரதி தொடர்புடைய அமைச்சுக்களுக்கு / திணைக்களங்களுக்கு / மாவட்டச் செயலகங்களுக்கு முறையான எழுத்து மூலமான வேண்டுகோளின் பேரில் வழங்கப்படும். அதற்காக உத்தியோகத்தர் ஒருவர் இந்தத் திணைக்களத்திற்கு வரவேண்டியிருக்கின்ற அதேவேளையில், அவ்வாறு வர முடியாத சந்தர்ப்பங்களில் அதுபற்றி அறிவித்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த நிறுவனத்திற்கான இறுதித் திறைசேரிக் கணக்குக் கூற்றை தபால் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளை இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட திறைசேரிக் கணக்குக் கூற்றின் தகவல்களின் பிராகாரம் மாத்திரமே தாயரித்தல் வேண்டும் என்பதனைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

2.5 யாதேனும் ஒரு அமைச்சு திணைக்களம் அல்லது மாவட்டச் செயலகம் ஒன்றினால் வேறு அரசாங்க அல்லது தனியார் நிறுவனம் ஒன்றிடம் பொருட்கள் மற்றும் சேவைகளை 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் பெற்றுக் கொண்டிருப்பின், அது தொடர்பான பற்றுச் சீட்டுக்களை 2013 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.6 நிதி ஒழுங்குவிதி 215(3)(C) இன் பிரகாரம் ஆண்டிறுதி செலவினத் தலைப்புகளின் மீதி ஏற்பாடுகளை வைப்புக் கணக்கிற்கு மாற்றுவதற்கான அனுமதியானது

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலிருந்து அதற்குரிய அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தால் மாத்திரமே வழங்கப்படும். அவ்வாறு அனுமதி கிடைக்கப்பெற்ற மீதி ஏற்பாடுகளை மாற்றுவதற்காக புதிய சேமிப்புக் கணக்கு இலக்கமொன்று 6000/0/0/11 இன் கீழ் உரிய நிறுவனங்களுக்கு இந்தத் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டிற்காக வழங்கப்படுவதனால் எக்காரணம் கொண்டும் தற்போது பேணி வரப்படுகின்ற முன்னைய ஆண்டுக்குரிய வைப்புக் கணக்குகளுக்கு 2013 ஆம் ஆண்டிற்குரிய நிதி ஏற்பாடுகளை மாற்றம் செய்யக் கூடாது. மேற்படி வேண்டுகோள்களை சமர்ப்பிக்கும் போது உரிய செலவினத் தலைப்பின் போதிய ஏற்பாடுகள் உள்ளனவா என்பது பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2.7 கணக்குப் புத்தகங்களின் கணக்குகளைத் தீர்க்கும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அமைச்சின்/ திணைக்களத்தின்/ மாவட்டச் செயலகத்தின் புத்தகங்களில் காட்டப்படுகின்ற அனைத்துக் கணக்குகளையும் 2013 ஆம் ஆண்டின் இறுதித் திறைசேரிக் கணக்கு கூற்றுகளின் கணக்குத் தகவல்களுடன் இணக்கம் கண்டு முரண்பாடுகள் இல்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

3. 2013 ஆம் நிதியாண்டின் கணக்குகளைத் தீர்க்கும் பணி மற்றும் அதற்கான இறுதித் திகதிகளை உள்ளடக்கிய எதிர்காலப் பணிகள்

| தொடர் இலக்கம் | விடயம் | பணி தொடர்பான தெளிவுபடுத்தல்கள் | பணியினைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிகள் |
|---|---|---|---|
| 3.1 | 2013 ஆம் ஆண்டின் காசுப் புத்தகத்தைத் தீர்த்தல் | திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும் | 2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்று |
| 3.2 | 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப்பட்ட முதலாவது கணக்குச் சுருக்கங்களை சமர்ப்பித்தல் | அரச கணக்குகள் சுற்றறிக்கை 229/2012 இல் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்படுத்தலின் பிரகாரம் இந்தக் கணக்குச் சுருக்கங்களை சமர்ப்பித்தல் வேண்டும். | (i) முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் 2014 ஆம் ஆண்டு சனவரி 10 ஆம் திகதிக்கு முன்னர்<br>(ii) இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் 2014 ஆம் ஆண்டு சனவரி 14 ஆம் திகதிக்கு முன்னர் |

| தொடர் இலக்கம | விடயம் | பணி தொடர்பான தெளிவுபடுத்தல்களள | பணியினைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிகளள |
|---|---|---|---|
| 3.3 | முதலாவது திறைசேரி கணக்குக் கூற்றுக்களை வெளியிடுதல் | 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் முதலாம் கணக்குச் சுருக்கத்தில் உள்ளடங்கி இருக்கின்ற கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய முதலாவது தறைசேரிக் கணக்குக் கூற்று திறைசேரியின் இணையத் தளமாகிய http/www.treasury.gov.lk இல் விடுவிக்ககப்படும். இதன் மூலம் அரச கணக்குகள் திணைக்களத்தின் இணையத் தளப் பக்கத்திற்குச் சென்று முதலாவது திறைசேரிக் கணக்குக் கூற்றுகளை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். | 2014 ஆம் ஆண்டு சனவரி 17 ஆம் திகதிக்கு முன்னர் |
| 3.4 | முதலாவது குறைநிரப்புக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பித்தல் | 2013 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தின் முதலாவது கணக்குச் சுருக்கத்தை உள்ளடக்குவதற்கு முடியாமல் போன கொடுக்கல் வாங்கலை மாத்திரம் உள்ளடக்கி "முதலாவது குறைநிரப்புக் கணக்கு சுருக்கம்" சமர்ப்பித்தல் வேண்டும். இங்கு CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான மாதாந்தக் கணக்குகளை மூடுதல் (Month end process) பூர்த்தியடைந்த பின்னர் மாத்திரம் முதலாவது குறைநிரப்புக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பித்தல் வேண்டும். | 2014 ஆம் ஆண்டு சனவரி 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 3.5 | முதலாவது குறைநிரப்புக் கணக்குச் சுருக்கத்தையும் உள்ளடக்கிய திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களை வெளியிடுதல். | 2013 டிசம்பர் மாதம் முதலாவது கணக்குச் சுருக்கத்தையும் முதலாவது குறைநிரப்புக் கணக்கு சுருக்கத்தையும் அறிக்கையிடப்பட்ட சகல பெறுகைகளையும் கொடுப்பனவுகளையும் பிழைகள் சரிசெய்யப்படுதல் உள்ளடங்கிய முதலாவது குறைநிரப்புக் கணக்கு கூற்று திறைசேரியின் இணையத் தளமாகிய http/www.treasury.gov.lk இல் விடுவிக்ககப்படும். இதன் மூலம் அரச கணக்குகள் திணைக்களத்தின் இணையத் தளப் பக்கத்திற்குச் சென்று முதலாவது குறைநிரப்பு திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களை பெற்றுக் கொள்ள முடியும். | 2014 ஆம் ஆண்டு சனவரி 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |

| தொடர் இலக்கம | விடயம் | பணி தொடர்பான தெளிவுபடுத்தல்கள | பணியினைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிகள |
|---|---|---|---|
| 3.6 | இரண்டாவது மற்றும் இறுதியில் திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களை வெளியிட முன்னர் நிதி ஒழுங்குவிதி 69 விண்ணப்பப் படிவம் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | இவ்வாறு விண்ணபப்ப் படிவங்களை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பின்னர் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்படும். | 2014 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 3.7 | தொடர்ந்தும் கணக்குகளில் உள்ள விலைகளை சரிசெய்தல் உள்ளடங்கிய இரண்டாவது மற்றும் இறுதி குறைநிரப்புக் கணக்குச் சுருக்கத்தை அரச கணக்குகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் | இந்த இரண்டாவது மற்றும் இறுதி குறைநிரப்புக் கணக்குச் சுருக்கம் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு / வருடத்திற்கு உரிய சகல சரிசெய்தல்களும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்கி அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். | 2014 பெப்ரவரி 07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 3.8 | இரண்டாவது திறைசேரிக் கணக்கு கூற்றை வெளியிடுதல் | இரண்டாவது மற்றும் இறுதி குறைநிரப்புக் கணக்குச் சுருக்கத்தின் உள்ளடக்கப்பட்ட சரிசெய்தல்கள் மற்றும் நிதியொழுங்கு விதி 69 இற்கு மாற்றுவதற்கு உள்ளடக்கி இரண்டாவது திறைசேரிக் கணக்குக் கூற்றுகள் வெளியிடுதல். | 2014 பெப்ரவரி 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 3.9 | திறைசேரி செயற்பாடுகள், தபால், உள்நாட்டு இறைவரி, சுங்கம், புகையிரதம், அரசாங்க தொழில்முயற்சி திணைக்களம் ஆகியவற்றினால் ஜேர்னலை சமர்ப்பித்தல் | மேற்குறிப்பிடப்பட்ட இரண்டாவது திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் இந்த ஜேர்னலை சமர்ப்பித்தல். | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 3.10 | 2013 ஆம் ஆண்டுக்கான இறுதி திறைசேரி கணக்குக் கூற்றுக்களை வெளியிடுதல் | அடையாளம் காணப்பட்ட சகல கணக்குக் கிளைகளையும் சரிசெய்தல் மற்றும் கணக்குகள் தொடர்பான மாற்றல்களுக்கான ஜேர்னலை உள்ளடக்கிய இறுதிக் கணக்கு கூற்றுக்களை வெளியிடுதல். இந்தக் கணக்குக் கூற்றுக்கள் கிடைக்கப் பெற்றமை சம்பந்தமாக 2.4 பந்தியின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |

| தொடர் இலக்கம | விடயம் | பணி தொடர்பான தெளிவுபடுத்தல்கள | பணியினைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிகள |
|---|---|---|---|
| 3.11 | பொறுப்புக்கள் சம்பந்தப்பட்ட …… அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். | 2013 ஆம் ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டியிருக்கின்ற ……. பற்றிய விபரங்கள் இணைப்பு 1 இல் உள்ளடங்கியுள்ள கூற்றுக்கள் அரச கணக்குத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த இணைப்பு 1 குறிப்பிடப்படாத எந்தவொரு பொறுப்புக்களுமோ அல்லது இணைப்புக்களுமோ 2014 ஆம் ஆண்டின் தீர்க்கப்படக் கூடாது. | 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் |
| 3.12 | முற்பணக் கணக்கு | சகல முற்பணக் கணக்குகளிலும் முதல் பிரதி கணக்காய்வாளர் அதிபதி அவர்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அதேவேளையில் அவற்றின் பிரதிகள் அரச கணக்குகள் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு அனுப்புதல் | 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |

4. இச்சுற்றறிக்கை தொடர்பாக மேலும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படும் பட்டசத்தில் அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் கணக்குச் சேவைகள் தொலைபேசி இலக்கம் 011-2484753, பிரதிப் பணிப்பாளர் (கணக்குச் சேவைகள்) தொலைபேசி இலக்கம் 011-2484737, பிரதிப் பணிப்பாளர் (கணக்கு மற்றும் அறிக்கையிடல்) தொலைபேசி இலக்கம் 011-2484735 பிரதிப் பணிப்பாளர் (திட்ட முறைமை மற்றும் பயிற்சி) தொலைபேசி இலக்கம் 011-2484730 என்பவற்றின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

5. மேற்படி கணக்குகளைத் தீர்க்கும் முறைமையினை பின்பற்றி 2013 ஆம் ஆண்டிலே கணக்குகளைத் தயாரிக்கும் நிதிசார் பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவுமாறு சகல பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் / கணக்கீட்டு உத்தியோகத்தர்களிடம் பணிவுடன் வேண்டுகிறேன்.

இப்படிக்கு – உண்மையுள்ள

ஒப்பம்: என். ஜீ. தாயரத்ன
அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம்
திறைசேரியின் பிரதிச் செயலாளருக்காக

பிரதிகள்: 1 கணக்காய்வாளர் நாயகம்
2 பணிப்பாளர் நாயகம் - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
3 பணிப்பாளர் நாயகம் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
4 பணிப்பாளர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி